செ.வெ.எண்: 14/மே நாள்: 06.05.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## பரமக்குடி மற்றும் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் வாக்காளர்களுக்கு வாக்குச்சாவடி சீட்டு (Voters Booth Slip) வழங்கும் பணிகளை

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நகராட்சி பகுதிகள் மற்றும் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நல்லுக்குறிச்சி ஆகிய பகுதிகளில் இன்று (06.05.2016) மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப.,, அவர்கள், வாக்காளர்களுக்கு வாக்குச்சாவடி சீட்டு (Voters Booth Slip) வழங்கும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, ஆய்வின் போது தெரிவித்ததாவது:

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் நேற்று முதல் அந்தந்த தொகுதிக்குட்பட்ட வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் (Booth Level Officers) மூலம் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடிக்குட்பட்ட பகுதிகளுக்கு நேரடியாக சென்று வாக்குச் சாவடி சீட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. வாக்காளர்களின் பெயர் விபரம் அச்சிடப்பட்ட பதிவேடுகளும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அவர்கள் வாக்குச்சாவடி சீட்டை சம்பந்தப்பட்ட வாக்காளர்களிடம் ஒப்படைத்து பதிவேட்டில் கையொப்பம் பெறுவார்கள். சம்பந்தப்பட்ட வாக்காளரிடமோ அல்லது அவர்களது குடும்பத்தில் 18 வயது பூர்த்தியடைந்தவரிடமோ வாக்குச்சாவடி சீட்டை ஒப்படைத்து கையொப்பம் பெறவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அனைத்து வாக்குச்சாவடி சீட்டுகளும் மே 10-ஆம் தேதிக்குள் விநியோகம் செய்து முடிக்கப்படவுள்ளது. மேலும் வீட்டில் உள்ளவர்கள் இல்லாது வீடு பூட்டியிருந்தால் அகர வரிசைப்படி அடுக்கி வாக்குச்சாவடி வாரியாக வரிசையாக அடுக்கி தனித்தனி கவர்களில் வைத்து தேர்தல் நடத்தும் அலுவலரிடம் திரும்ப ஒப்படைத்து விட வேண்டும் என கூறப்பட்டுள்ளது. வாக்காளர்கள் வாக்களிக்க செல்லும் போது வாக்குச்சாவடி சீட்டுகளை காண்பித்து வாக்களிக்கலாம். ஆனால் நகலினை காண்பித்து வாக்களித்திட அனுமதி கிடையாது என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப.,, அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் (சார் ஆட்சியர்) டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் (முதுகுளத்தூர்) திரு.கோவிந்தன், வாக்குச்சாவடி நிலைய அலுவலர் திரு.சேகர் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**